நமது தின கனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

நமது தின கனி
NAMADHU DHINA KANI
தமிழ் நாளிதழ்
RNI-TNTAM/2023/88253




| Vol: 02 | Issue: 16 | 4 Pages | 16.8.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 16 | 4 பக்கங்கள் | 16.8.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

# 78வது சுதந்திர தினம்: கோட்டை கொத்தளத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொடி ஏற்றினார்


சென்னை, ஆக. 16

78வதுசுதந்திரதினத்தையொட்டி, சென்னை கோட்டை கொத்தளத்தில் தேசிய கொடியேற்றி உரையாற்றுகிறார் தமிழக முதல்வா' மு.க.ஸ்டாலின்.. புனித ஜார்ஜ் கோட்டையில் இன்று காலை 9 மணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தேசியக்கொடியை ஏற்றி வைத்து உரையாற்றுகிறார்

இந்திய தேசத்தின் 78வது சுதந்திர தினம் இன்று 15ம் தேதி நாட்டு மக்களால் கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது..

இதையொட்டி, சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையில் காலை 9 மணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் தேசியக்கொடி ஏற்றி உரையாற்றுகிறார்.

அறிமுகம்: காலை 8.45 மணிக்கு சுதந்திர தின விழா நிகழ்ச்சிக்கு கோட்டை கொத்தளத்திற்கு வரும் முதல்வர் ஸ்டாலினை தலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா வரவேற்பார். முதல்வருக்கு முப்படை அதிகாரிகள், டிஜிபி சங்கர் ஜிவால், சட்டம்ஒழுங்கு கூடுதல் டிஜிபி டேவிட்சன் தேவாசீர்வாதம், சென்னை போலீஸ் கமிஷனர் அருண் ஆகியோரைதலைமை செயலாளர் சிவ்தாஸ் மீனா அறிமுகம் செய்து வைப்பார்.




இதையடுத்து, காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்றுக்கொள்வார்.பிறகு,கோட்டை கொத்தளத்தின் மேல் உள்ள கொடியேற்றும் இடத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வந்து, தேசியக்கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்துகிறார். தொடர்ந்து, தமிழக மக்களுக்குசுதந்திரதினஉரைநிகழ்த்துவார்.

விருதுகள்: முதல்வர் ஸ்டாலின் தேசியக்கோடி ஏற்றி வைத்ததுமே, பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்களை கவுரவிக்கும் விதமாக விருதுகள் வழங்கி கௌரவிப்பார்.

விழா மேடையில் தமிழ்நாட்டிற்கும், தமிழின வளர்ச்சிக்கும் பங்காற்றியவர்களை பெருமைப்படுத்த "தகைசால் தமிழர்" என்ற பெயரிலான விருது, ரூ.10 லட்சத்துக்கான காசோலை மற்றும் பாராட்டு சான்று வழங்கப்படுகிறது.. இந்த ஆண்டுக்கான விருதுக்கு காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், இலக்கியவாதியுமான மூத்த தலைவர் குமரி அனந்தன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சிறப்பு விருந்தினர்கள்: சுதந்திர தினவிழாவில் பங்கேற்கும் அமைச்சர்கள், எம்பிக்கள், எல்எல்ஏக்கள், உயர் அதிகாரிகள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள், பொதுமக்கள் உள்ளிட்டோர் அமர்ந்து நிகழ்ச்சிகளை பார்வையிடுவதற்காக தனித்தனி மேடைகள் அமைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, சுதந்திர தினவிழாவையொட்டி ஒத்திகை நிகழ்ச்சியும் கோட்டை கொத்தளத்தில் நடத்தி பார்க்கப்பட்டது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு சென்னைமுழுவதும்முக்கிய இடங்களில் போலீஸ் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. ரயில், பஸ் நிலையம், மக்கள் அதிகம் கூடும் இடங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான பணியில் தொழிலாளர்கள் இரவு பகலாக ஈடுபட்டு வருகிறார்கள்.

# அண்ணாமலைக்கே நேரடியாக போன் போட்ட ஸ்டாலின்: உடனே ஓகே சொன்ன அண்ணாமலை

சென்னை, ஆக. 16

முன்னாள் முதல்வர் கருணாநிதி உருவம் பொறித்த நாணயம் வெளியீட்டு விழாவில் தான் பங்கேற்க இருப்பதாக பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார். இந்த விழாவுக்கு வருமாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தன்னை அழைத்ததாக அண்ணாமலை கூறி உள்ளார்.

வரும் ஆகஸ்ட் 18 ஆம் தேதி முன்னாள் முதல்வர் கருணாநிதி நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியிடப்படுகிறது. மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கருணாநிதி நினைவு நாணயத்தை வெளியிடுகிறார். இந்த நிகழ்வில் பங்கேற்க எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, பாஜக மாநில தலைவர் அண்ணாமலை உள்ளிட்டோருக்கு அரசு சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கருணாநிதி உருவம் பொறித்த நாணயம்: தமிழ்நாட்டின் முதலமைச்சராக 5 முறை பதவி வகித்து மறைந்த கலைஞர் கருணாநிதியின் நூற்றாண்டு விழா அரசு சார்பிலும், திமுக சார்பிலும் கொண்டாடப்பட்டு வருகிறது. கருணாநிதி நூற்றாண்டை முன்னிட்டு, பல்வேறு திட்டங்களையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

அந்தவகையில், கருணாநிதியின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு, அவரது உருவம் பொறிக்கப்பட்ட நாணயத்தை வெளியிட மத்திய அரசு ஒப்புதல் அளித்து, கடந்த ஜூன் 12 12 ஆம் தேதி மத்திய அரசிதழில் வெளியிட்டது. இந்த நாணயத்தை அதிகாரப்பூர்வமாக வரும் ஆகஸ்ட் 18 ஆம் தேதி சென்னை கலைவாணர் அரங்கில், தமிழ்நாடு அரசு சார்பில் நடைபெறும் விழாவில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிடுகிறார்.

அனைவருக்கும் அழைப்பு: இந்த விழாவில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அமைச்சர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், திமுக நிர்வாகிகள், கூட்டணிகட்சிகளின் தலைவர்கள் என பலரும் பங்கேற்க உள்ளனர். ரஜினிகாந்த், கமல்ஹாசன் உள்ளிட்ட திரை பிரபலங்களும் இந்த நிகழ்வில் பங்கேற்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி, பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை, தமாகா தலைவர் ஜிகே வாசன், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங், கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயத்தை வெளியிட உள்ளதால் இந்த நிகழ்வில் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை பங்கேற்பாரா என்ற எதிர்பார்ப்பு எழுந்தது. இந்நிலையில், முதல்வர் ஸ்டாலினே, அண்ணாமலையை போனில் தொடர்பு கொண்டு அழைப்பு விடுத்திருக்கிறாராம்.

முதல்வரே போன் செய்து அழைப்பு: இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அண்ணாமலை, "முதல்வர் ஸ்டாலின் தொலைபேசி மூலமாக என்னை அழைத்திருந்தார். நமது முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் வகையில் 100 ரூபாய் நாணயம் வெளியிடப்பட உள்ளது. தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று மத்திய அரசு அதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்த நாணயம் வெளியீட்டு விழாவில் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கலந்து கொள்கிறார்.

முதல்வர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அன்போடு அழைத்தார். அலுவலகத்திற்கும் அழைப்பிதழ் கொடுத்து அனுப்பி உள்ளார். முதல்வரின் அன்பான அழைப்பை ஏற்று தமிழக பாஜக சார்பில் நானும், மத்திய இணை அமைச்சர் எல்.முருகனும் கலந்து கொள்கிறோம். மத்திய அரசு இந்த நாணயத்துக்கு அனுமதி கொடுத்திருப்பதை தமிழகத்துக்கு கிடைத்த பெருமையாகவும், கலைஞருக்கு கிடைத்த பெருமையாகவும் நான் பார்க்கிறேன்.

நான் கண்டிப்பாக பங்கேற்பேன்

அண்ணாமலை: எங்களுக்குள் கருத்து வேறுபாடுகள், சித்தாந்த ரீதியாக, கட்சி அடிப்படையில் இருக்கலாம். அது வேறு. ஆனால் மாநிலத்தின் முதல்வராக ஐந்து முறை பொறுப்பில் இருந்தவர், தமிழகத்தின் வளர்ச்சிக்காக பல கட்டங்களில் உழைத்தவர். எனவே இந்த நிகழ்வில் தமிழக பாஜக கட்டாயம் பங்கேற்கும். எப்படி பெருந்தன்மையோடு ராஜ்நாத் சிங் தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று வருகிறாரோ, அதே பெருந்தன்மையை தமிழக அரசும் காட்டும் என்று நம்புகிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.


# சுதந்திர தின அணிவகுப்பில் ஜே.ஆர்.சி. மாணவர்கள் அணிவகுப்பு: கலெக்டர் பாராட்டு

விழுப்புரம் ஆக 16

விழுப்புரம் மாவட்ட சுதந்திரதின அரசுவிழாஅணிவகுப்பில்மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் சி.அறிவழகன் அறிவுறுத்தலின் படி மாவட்டக் கல்வி அலுவலர் திருமதி த சு.மகாலட்சுமி அவர்களில் வழிகாட்டுதலுடன் ஐந்து பள்ளிகளான. தூய இருதய ஆங்கிலோ இந்தியன் மேனிலைப்பள்ளி, விழுப்புரம். அரசு உயர்நிலைப்பள்ளி, அத்தி யூர் திருவாதி. அரசு உயர்நிலைப்பள்ளி, நன்னாடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி. அகரம் சித்தாமூர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சித்தானங்கூர் ஆகிய பள்ளிகளிலிருந்து ஜூனியர் ரெட் கிராஸ் மாணவர்கள் 85 பேர் அணிவகுப்பில் பங்கேற்றனர். அணிவகுப்பை




முட்டத்தூர். ஒய்க்காப் மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியரும். விழுப்புரம் கல்வி மாவட்ட ஜே.ஆர்.சி படைப்பிரிவை மாவட்டக் கன்வீனர் ம. பாபு செல்வதுரை தலைமை தாங்கி நடத்தினார். பங்கேற்ற மாணவர்களின் பெரும்பாலோர் கிராமப்புறத்தை சார்ந்த மாணவர் என்பது பாராட்டுக்குறியது. இவர்களை மாவட்ட ஆட்சியர் டாக்டர் C.பழனி பாராட்டுச் சான்று வழங்கி ஜே.ஆர்.சி மாணவர்களை வாழ்த்தினார். உடன் ஜே.ஆர்.சி நிர்வாகிகள் இணைக் கன்வீனர்கள் S. இரவீந்திரன். ஏ.தமிழழகன், மாவட்ட நிர்வாகிகள். A.எட்வீன். P. மரியராஜ். R.T. பிலிப் ஜெயன். ஹசீனா ஆகியோர் மேற்பார்வையில் 85 மாணவர்கள் பாராட்டுச் சான்று பெற்றனர்.



வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்

விளக்கம்:

தமக்குப் பின் எஞ்சி நிற்பதாகியப் புகழைப் பெறாவிட்டால் உலகத்தார் எல்லார்க்கும் அத்தகைய வாழ்க்கை பழி என்று சொல்லுவர்.

# தாய்லாந்தின் புதிய பிரதமர் யார்..? ஆளுங்கட்சி வெளியிட்ட முக்கிய அறிவிப்பு



பாங்காக், ஆக. 16

தாய்லாந்தில் லஞ்ச வழக்கில் தண்டனை பெற்ற பிச்சித் சைபானை மந்திரியாக நியமித்தது சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், அவர் தனது பதவியை ராஜினாமா செய்தார். மேலும், பிச்சித் சைபானை மந்திரியாக நியமிக்க பரிந்துரை செய்த பிரதமர் ஸ்ரெத்தா தவிசினை பதவிநீக்கம் செய்துஅந்நாட்டின்அரசியலமைப்புகோர்ட்டுஅதிரடியாகஉத்தரவிட்டது.

மந்திரிசபை உறுப்பினர்களை தகுதி அடிப்படையில் நியமிக்கும் பொறுப்பு பிரதமருக்கு இருப்பதாகவும், பிரதமர் ஸ்ரெத்தா தவிசின் அதற்கான விதிகளை மீறிவிட்டார் என்றும் கோர்ட்டு தனது உத்தரவில் தெரிவித்தது. ஸ்ரெத்தா தவிசின் பதவிநீக்கம் செய்யப்பட்டாலும், புதிய பிரதமரை நாடாளுமன்றம் அங்கீகரிக்கும் வரை அவர் காபந்து பிரதமராக நீடிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், புதிய பிரதமர் வேட்பாளரை தேர்வு செய்யும் பணியில் ஆளுங்கட்சியான பியூ தாய் கட்சி தீவிர ஆலோசனை மேற்கொண்டது. முன்னாள் நீதித்துறை மந்திரி சாய்காசெம் நிதிசிரி மற்றும் முன்னாள் பிரதமர் தக்சின் ஷினவத்ராவின் இளைய மகள் பேடோங்டர்ன் ஷினவத்ரா (வயது 37) ஆகியோரின் பெயர்கள் முன்னிலையில் இருந்தன. இவர்களில், பேடோங்டர்ன் ஷினவத்ராவை கட்சி தலைமை தேர்வு செய்து இன்று அறிவித்துள்ளது. பேடோங்டர்ன் ஷினவத்ராவுக்கு பிரதமர் பதவி வழங்க கூட்டணி கட்சிகளும் ஒப்புதல் அளித்தன.

புதியபிரதமரைதேர்ந்தெடுப்பதற்காகநாளைநாடாளுமன்றம்கூடுகிறது. அப்போது, பிரதமர் பதவிக்கான வாக்கெடுப்பு நடத்தப்படும். வாக்கெடுப்பில் பேடோங்டர்ன் வெற்றி பெற்று, நாடாளுமன்றம் அங்கீகரித்தபின் அவர் முறைப்படி பிரதமராக பதவியேற்பார். அத்துடன் அவர் தாய்லாந்தின் இரண்டாவது பெண் பிரதமர் என்ற பெருமையை பெறுவார்.

# குரங்கு அம்மை பாதிப்பு அதிகரிப்பு: உலக நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்த உலக சுகாதார அமைப்பு

வாஷிங்டன், ஆக. 16

குரங்கு அம்மை என்பது ஒரு அரிய வகை தொற்று நோய் ஆகும். இந்த நோயை எம்பாக்ஸ் என்று அழைக்கின்றனர். இது மனிதர்களுக்கு இடையே எளிதில் பரவாது. நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்ட விலங்குகளிடமிருந்தே மனிதர்களுக்குப் பரவுகிறது. இந்த நோய் பாதிப்பு ஏற்பட்டவர்களில், 10ல் ஒருவர் இறக்கவாய்ப்பு உள்ளதாக உலகசுகாதாரநிறுவனம் தெரிவித்துள்ளது.

கொரோனாவைப் போல 2022 முதல் பரவத் தொடங்கிய இந்த நோயானது முதலில் ஆப்ரிக்க நாடுகளில் பாதிப்பு கண்டறியப்பட்டது. தற்போது, மெல்ல மெல்ல 100க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவத் தொடங்கியது. ஆப்ரிக்க நாடுகளில் மட்டும் 17 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இந்தத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 524 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தநிலையில், ஆப்பிரிக்காவில் அதிகரித்துவரும் குரங்கு அம்மை நோய் பாதிப்பால், உலகளாவிய சுகாதார அவசர நிலையை உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது. ஐநா சபையின் உலக சுகாதார அமைப்பின் அவசரக்குழுக் கூட்டத்திற்குப் பிறகு உலக சுகாதார அமைப்பின் இயக்குநர் டெட்ரோஸ் அதானோம் இந்த அறிவிப்பை வெளியிட்டார். இந்த வைரஸ் சர்வதேச எல்லைகள் மூலம் பல நாடுகளில் பரவக்கூடும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது. மேலும் ஆப்பிரிக்கா நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள் குரங்கு அம்மை நோய் பாதிப்பைப் பொது சுகாதார அவசர நிலையாக அறிவித்துள்ளன.

# பாகிஸ்தானில் பயங்கரம்: பெல்ஜியம் நாட்டு இளம்பெண் கூட்டு பாலியல் பலாத்காரம்

இஸ்லாமாபாத், ஆக. 16

பாகிஸ்தான் இஸ்லாமாபாத்தில் சாலையோரத்தில் ஒரு இளம்பெண் கை,கால்கள் கட்டப்பட்ட நிலையில் மயங்கி கிடந்தார். இதை பார்த்த பொதுமக்கள் போலீசுக்கு தகவல் கொடுத்தனர். இது தொடர்பாக பாகிஸ்தானில் உள்ள ஒரு தொலைக்காட்சியிலும் வீடியோ வெளியானது. இதனையடுத்து போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து அந்த பெண்ணை மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று சேர்த்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. போலீசார் அவரிடம் நடத்திய விசாரணையில் பல திடுக்கிடும் தகவல் வெளியானது.

அந்த பெண்ணிற்கு 28 வயது ஆகிறது. அவர் பெல்ஜியம் நாட்டை சேர்ந்தவர் ஆவார். சமீபத்தில்தான் அவர் பாகிஸ்தான் வந்தார். ஒரு கும்பல் தொடர்ந்து 5 நாட்கள் அடைத்து வைத்து தன்னை பாலியல் பலாத்காரம் செய்ததாக அந்த பெண் போலீசில் தெரிவித்தார். இதை கேட்டு போலீசார் அதிர்ச்சி அடைந்தனர். அப்பெண் கொடுத்த தகவலின் பேரில் போலீசார் தமீசுதீன் என்பவரை விசாரித்து வருகின்றனர்.

இந்த சம்பவத்தில் ஈடுபட்ட மற்றவர்கள் குறித்து போலீசார் அவரிடம் விசாரித்து வருகின்றனர். இதில் பல திடுக்கிடும் தகவல் வெளியாகலாம் என்று தெரிகிறது. பாகிஸ்தானில் நேற்றுதான் சுதந்திரதினம் கொண்டாடப்பட்டநிலையில், பெல்ஜியம் நாட்டை சேர்ந்த இளம்பெண் ஒருவர் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவம் அந்நாட்டில் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

# ஆலம்பூண்டியில் நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு அமைப்பு சார்பில் 78வது சுதந்திர தின விழா

செஞ்சி ஆக 16

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் ஆலம்பூண்டி R.Cதுவக்கப்பள்ளியில் 78வது சுதந்திர தினத்தை முன்னிட்டு பள்ளித லைமை ஆசிரியை அருட்சகோதரி அமலோற்பவ விண்ணரசி தலைமையில் நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு அமைப்பு நிறுவனர் மகாதேவன் அனைவரையும் வரவேற்றார் மாநில ஒருங்கிணைப்பாளர்அன்புசெழியன்தேசிய கொடியை ஏற்றி சிறப்புரையாற்றினார் நிகழ்ச்சியில்தேசியச்செயலாளர் வர்கீஸ் ஜான் குமார் மற்றும் பிரகாஷ், பள்ளியின்

ஆசிரியை அருட்சகோதரி சுசிலா, அருட்சகோதரி பிருந்தா, சங்கீதா,காமாட்சி, மகாலட்சுமி, மாணவ மாணவியர்கள் பெற்றோர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்



# திருப்பூர் மாவட்டம் சுண்டக்கம்பாளையம் அரசுப் பள்ளியில் சுதந்திர தின விழா

திருப்பூர், ஆக. 16

திருப்பூர் மாவட்டம் சுண்டக்கம்பாளையம் அரசுப்பள்ளியில்சுதந்திரதின விழா ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சுண்டக்காம்பாளையம் பள்ளியில் சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது சுண்டக்காம்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர் லோகநாதன் தலைமை ஏற்றார். துணைத்தலைவர் தமிழ்ச்செல்வி எஸ் எம் சி தலைவர் சித்ரா பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் பழனிச்சாமி முன்னிலை வைத்தனர். பள்ளி தலைமையாசிரியர் சு.காளியப்பன் அனைவரையும் வரவேற்று தேசிய கொடியை ஏற்றி வைத்து சுதந்திரம் கிடைத்த வரலாற்றை எடுத்துக் கூறினார் ஊராட்சி மன்ற தலைவர் சிறப்புரை ஆற்ற, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஆசிரியர் பயிற்றுனர் திரு அருண்குமார் அவர்கள் அரசின் நலத்திட்டங்கள் பற்றியும் பாராட்டி பேசினார்.ஊர் கொத்துக்காரர் செல்வராஜ் ராமசாமி மற்றும் முன்னாள் மாணவர்கள் பெற்றோர்கள் ஊர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர் மாணவ மாணவியருக்கு பேச்சு கட்டுரை ஓவியம் போட்டிகள் நடைபெற்றது மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் பாராட்டுகள் வழங்கப்பட்டது விழா முடிவில் அனைவருக்கும் லட்டு வழங்கப்பட்டது ஆசிரியர் ரங்கநாதன் நன்றி கூற நாட்டுப் பண்ணுடன் முடிந்தது.




# காமராசர் பிறந்தநாளில் மஞ்சப்பை வழங்குதல்

மதுரை, ஆக 16

மதுரை, சுப்பராமன் நினைவு உறைவிட ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கு காமராசர் பிறந்தநாளினை முன்னிட்டு மஞ்சப்பை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு தன்னம்பிக்கை மனிதர்கள் சமூக நல அறக்கட்டளை நிறுவனர் ஜெயராமன் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினர்களாக சமூக ஆர்வலர்கள் ஷேக் மஸ்தான் மற்றும் நூருல்லாக் கலந்து கொண்டு கல்வி வளர்ச்சி நாளின் முக்கியத்துவத்தை கூறி இனிப்புகளையும் நெகிழியினால் ஏற்படும் பாதிப்பினை விளக்கி மீண்டும் மஞ்சப்பையினை இலவசமாக வழங்கினார்கள். மாணவர்கள் அனைவரும் நெகிழியினை பயன்படுத்த மாட்டோம். மஞ்சப்பையினை பயன்படுத்துவோம் என உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.



# தஞ்சாவூர் மாவட்டத்தில் கலெக்டர் தேசிய கொடியினை ஏற்றி மரியாதை

தஞ்சாவூர், ஆக. 16

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஆயுதப்படை மைதானத்தில் சுதந்திர தின விழாவினை முன்னிட்டு மாவட்ட கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், தேசிய கொடியினை ஏற்றி வைத்து, தியாகிகளை கௌரவித்து, காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக் கொண்டார். சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கும் அவர்களின் வாரிசுதாரர்களுக்கும் கதர் ஆடை அணிவித்து கௌரவித்து 411 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 91 இலட்சத்து 27 ஆயிரத்து 490 மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட கலெக்டர் வழங்கினார்.

சுதந்திர தின விழா நிகழ்ச்சியில் முன்னாள் படைவீரர் நலத்துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூபாய் 1,59,000 மதிப்பிலும், மாவட்ட மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பில் 2 பயனாளிகளுக்கு நிதி உதவி ரூபாய் 1,48,998 மதிப்பிலும், தாட்கோ சார்பில் 303 பயனாளிகளுக்கு ரூபாய் 1,68,13,800 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 71 பயனாளிகளுக்கு ரூபாய் 4,65,192 மதிப்பில் விலையில்லா தையல் இயந்திரமும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் பாரம்பரிய நெல் விதை வங்கி பாதுகாவலர் விருது மற்றும் விதை வங்கி பராமரிப்பு விருது 1 பயனாளிக்கு ரூபாய் 3,00,000 மதிப்பிலும், வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில் குறுவை தொகுப்புத் திட்டத்தின் கீழ் 6 பயனாளிகளுக்கு ரூ.9,40,500 மதிப்பிலும், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகத்தின் சார்பில் 20 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பில் தமிழக அரசின் பசுமை விருது மற்றும் ரூபய் 1 இலட்சம் நிதி 3 பயனாளிக்கு ரூ.3,00,000 மதிப்பிலும் என மொத்தம் 411 பயனாளிகளுக்கு ரூ.1,91,27,490 மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் வழங்கினார்.





மேயர் தினேஷ்குமார் திருப்பூர் மாநகராட்சி மைய அலுவலக வளாகத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் தேசிய கொடியை ஏற்றி வைத்து திருப்பூர் குமரன் மணிமண்டபத்தில் உள்ள திருப்பூர் குமரன் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி கிரியப்பனவர், துணை மேயர் பாலசுப்பிரமணியம், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், துணை ஆணையாளர்கள் சுந்தர்ராஜ், சுல்தானா, தலைமை பொறியாளர் செல்வநாயகம், மாநகராட்சி அலுவலர்கள் உள்பட பலர் உள்ளனர்.

# சுதந்திர தின விழாவை முன்னிட்டு தேசியக்கொடியினை மாவட்ட கலெக்டர் ஏற்றி வைத்து காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்

நாமக்கல், ஆக. 16

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் மாவட்ட கலெக்டர் ச.உமா தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து, காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். சுதந்திர தின விழாவை கொண்டாடும் விதமாக மாவட்ட கலெக்டர் ச.உமா காவல் கண்காணிப்பாளர் எஸ். இராஜேஸ் கண்ணன், ஆகியோர் வெண்புறாக்களையும், வண்ணப்பலூன்களையும் வானில் பறக்க விட்டார்கள்.

மேலும், சுதந்திர போரட்ட வீரர்களின் தியாகத்தை போற்றும் வகையில் அவர்தம் வாரிசுதாரர்களை சிறப்பு செய்யும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மாவட்ட கலெக்டர் ச.உமா, கதர் ஆடை அணிவித்து பரிசுகளை வழங்கினார்.

பின்னர், அணிவகுப்பினை சிறப்பாக நடத்தியதற்காக 100 ஆயுதப்படை காவலர்கள், ஊர்க்காவல் படையினருக்கும், காவல் துறை பேண்ட் வாத்தியக்குழுவினருக்கும் மாவட்ட கலெக்டர் ச.உமா, பாராட்டு தெரிவித்து, கேடயங்களை வழங்கினார்.

சுதந்திர தினவிழாவில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.96,011/ மதிப்பில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.12,000 மதிப்பில் இலவச தையல் இயந்திரம், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.22.91 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள், வேளாண்மைத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.25,000/ மதிப்பில் நலத்திட்ட உதவிகள், கூட்டுறவுத் துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.2.70 இலட்சம் மதிப்பில் வட்டியில்லா கால்நடை பராமரிப்பு கடன், தாட்கோ சார்பில் 12 நபர்களுக்கு ரூ.27,000/ மதிப்பில் கல்வி உதவித்தொகை, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு அட்டைகள் என மொத்தம் 26 பயனாளிகளுக்கு ரூ.27.21 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட கலெக்டர் ச.உமா வழங்கினார்.

தொடர்ந்து, எருமப்பட்டி, அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, நாமக்கல், சுரபி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ரெட்டிப்பட்டி பாரதி அரசு நிதி உதவி மேல்நிலைப்பள்ளி, பொரசபாளையம் ஸ்ரீ விநாயகா மேல்நிலைப்பள்ளி, பொம்மம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி, மாரப்பநாயக்கன்பட்டி ஸ்பைரோ ப்ரைம் பப்ளிக் பள்ளி மாணவ, மாணவிகள் என மொத்தம் 6 அரசு மற்றும் தனியார் பள்ளிகளை சேர்ந்த 674 மாணவ, மாணவிகள் பங்கு பெற்ற கண்கவர் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இக்கலை நிகழ்ச்சிகளில் பங்கு பெற்ற பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை மாவட்ட கலெக்டர் வழங்கினார்.



# விழுப்புரம் மாவட்டத்தில் 78வது சுதந்திர தின விழா

விழுப்புரம், ஆக. 16

விழுப்புரம் மாவட்ட பெருந்திட்ட வளாக மைதானத்தில், நடைபெற்ற 78வது சுதந்திர தின விழாவில் மாவட்ட கலெக்டர்சி.பழனி தேசியக் கொடியை ஏற்றி வைத்து, காவல்துறையினரின் அணிவகுப்புமரியாதையை ஏற்றுக் கொண்டார். மேலும், சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டதற்கான நிகழ்வை குறிக்கும் வகையில் வெண்புறாக்களையும், வண்ண பலூன்களையும் பறக்கவிட்டார்.

தொடர்ந்து, காவல் துறை அணிவகுப்பினை மாவட்ட கலெக்டர் சி.பழனி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் தீபக் சிவாச், திறந்த வாகனத்தில் சென்று பார்வையிட்டார்.

சுதந்திர போராட்ட தியாகிகள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு பொன்னாடை அணிவித்து, நினைவு பரிசுகளை வழங்கி மரியாதை செலுத்தியதுடன், சுதந்திர தின வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டார்.

பின்னர், முன்னாள் படைவீரர்கள் நலத்துறை சார்பில் 03 பயனாளிகளுக்கு ரூ.60,000 மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளும், முதலமைச்சர் பொது நிவாரண நிதி திட்டத்தின்கீழ், 03 பயனாளிகளுக்கு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளும், சமூக பாதுகாப்பு திட்டத்தின்கீழ், 19 பயனாளிகளுக்கு ரூ.1.60 இலட்சம் மதிப்பீட்டில் திருமண நிதியுதவியும், 40 பயனாளிகளுக்கு ரூ.9.00℅ இலட்சம் மதிப்பீட்டில் இயற்கை மரண நிதியுதவியும் தொழிலாளர் நலத்துறை சார்பில் 11 பயனாளிகளுக்கு ரூ.10.64 இலட்சம் மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகள் என மொத்தம் 224 பயனாளிகளுக்கு ரூ.1.09℅ கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

விழுப்புரம் நகரில், சுதந்திர தின விழாவினை முன்னிட்டு, அண்ணல் மகாத்மா காந்தியடிகள் திருவுருவச் சிலைக்கு மாவட்ட கலெக்டர்சி. பழனி, மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



# வறுமை இல்லாத தேசத்தை உருவாக்க நாம் அனைவரும் பாடுபட வேண்டும் சுதந்திர தின விழாவில் விஐடி வேந்தர் டாக்டர் கோ. விசுவநாதன் பேச்சு

வேலூர், ஆக16

வேலூர் விஐடி பல்கலைகழகத்தில் இந்தியாவின் 78வது சுதந்திர தின விழா விஐடி வேந்தர் டாக்டர் கோ. விசுவநாதன் தலைமையில் நடைபெற்றது. விழாவில் பிரமாண்டமான தேசிய கொடியை வைத்து மரியாதை செலுத்தி விஐடி வேந்தர் டாக்டர் கோ.விசுவநாதன் தலைமையுரையாற்றுகையில்

சுதந்திர தினத்தை கொண்டாடும் இந்த தருணத்தில் சுதந்திரத்திற்காக போராடிய மகாத்மா காந்தி, வ. உ. சி., காமராசர் போன்றபல்வேறு தலைவர்கள் மற்றும் அவர்கள் செய்த தியாகங்களை நாம் அனைவரும் நினைவு கூற வேண்டும். தற்போது மக்கள் தொகையில் நாம்தான் முதலிடத்தில் உள்ளோம், அதேபோல் பொருளாதாரத்தில் உலக அளவில் நாம் முன்னேறி செல்ல வேண்டும். வறுமை ஒழிப்பு, அனைவரும் கல்வி பயில வேண்டும் . நாட்டின் வளர்ச்சி அனைத்து மக்களையும் சென்றடைய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தற்போது நாம் 5வது இடத்தில் உள்ளோம், இதுவே கடந்த காலங்களில் நாம் 7வது இடத்தில் இருந்தோம். பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்தை விட நாம் முன்னேறி உள்ளோம் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் காலங்களில் உலக அளவில் பொருளாதாரத்தில் ஜெர்மனி மற்றும் ஜப்பானை பின்னுக்குத் தள்ளி இந்தியா முன்னேறும் என நமது பிரதமரும், ஜனாதிபதியும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். பொருளாதாரத்தில் நாம் முன்னேற வேண்டுமானால் தனிநபர் வருமானம் அதிகரிக்க வேண்டும், இதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும். விவசாயம் மற்றும் தொழில் துறை உற்பத்தியில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். மேலும் வறுமை இல்லாத தேசத்தை உருவாக்க நாம் அனைவரும் பாடுபட வேண்டும் என வேந்தர் கோ.விசுவநாதன் கூறினார். விழாவில் துணைத் தலைவர் சங்கர் விசுவநாதன், உதவி துணைத் தலைவர் காதம்பரி ச. விசுவநாதன் துணைவேந்தர், இணை துணைவேந்தர், பதிவாளர், பேராசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





மதுரை மாவட்டம் நமது குரூப்பில் உள்ள திரு சத்தியமூர்த்தி தினகனி மதுரை மாவட்ட நிருபரின் புதல்வி மாணவி S.தியா சான்றிதழ் பெற்றபோது ஆசிரியர்கள் மற்றும் குடும்பத்தினர் உள்ளனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் நடைபெற்ற 78வது சுதந்திர தின விழாவின்போது நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறந்த மாநகராட்சிக்கான முதல்வர் விருதினை கோவை மாநகராட்சிக்கு வழங்கினார். விருது மற்றும் ரூ.50 லட்சத்திற்கான காசோலையினை கோவை மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.



நீலகிரி மாவட்டம் உதகை அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தேசிய கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா, கூடுதல் கலெக்டர், மாவட்ட வருவாய் அலுவலர் கௌசிக் உள்பட பலர் உள்ளனர்.

# முடுவார்பட்டியில் அதிமுக புதிய உறுப்பினர் அட்டை: ஆர்பி உதயக்குமார் வழங்கினார்

அலங்காநல்லூர், ஆக. 16

மதுரை புறநகர் மேற்கு மாவட்டம் அலங்காநல்லூர் ஒன்றிய கழகம் சார்பில் முடுவார்பட்டியில் புதிய உறுப்பினர்களுக்கான அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இந்தநிகழ்ச்சிக்கு அலங்காநல்லூர் ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். மாவட்ட விவசாய அணி செயலாளர் அலங்காநல்லூர் முன்னாள்தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர். ராம்குமார் வரவேற்புரை ஆற்றினார்

ஒன்றியகழக செயலாளர்கள். காளிதாஸ். அரியூர் ராதாகிருஷ்ணன் முன்னாள் எம்எல்ஏக்கள்கருப்பையா. மாணிக்கம். மகேந்திரன். தமிழரசன். வாடிப்பட்டி சேர்மன். ராஜேஸ்கண்ணா. ஆகியோர் முன்னிலை வகித்தனர் மதுரைபுறநகர் மேற்கு





மாவட்ட செயலாளர் முன்னாள் முப்பெரும் துறை அமைச்சரும் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான ஆர் பி உதயகுமார் கலந்து கொண்டு புதிய உறுப்பினர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்கி சிறப்புரையாற்றினார் இந்த நிகழ்ச்சியில் மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணை செயலாளர். ஜெயசந்திரமணியன். மாவட்ட விவசாய அணி இனைசெயலாளர் ஆர்பி குமார். கூட்டுறவு சங்க முன்னாள் தலைவர் பி.முத்துகிருஷ்ணன்.கூட்டறவு சங்க துணை தலைவர் முத்து கருப்பன் பால் பன்னை முன்னால் தலைவர் விவசாய அனி தலைவர். காமாட்சி. விவசாய அனி ஒன்றியகழக செயலாளர். அழகுமலை. ஒன்றிய பொருளாளர். பன்னைகுடி மகாராஜன். துனைசெயலாளர். ஆதனூர்சேகர். ஊராட்சி மன்ற தலைவர். சத்திரவெள்ளாப்பட்டி சிதம்பரம். இளைஞர் இளம் பெண்கள் பாசறை ஒன்றிய கழக செயலாளர். மதன். பெரிய இலந்தகுளம் கிளை செயலாளர் செந்தில்குமார். வாவிடமருதூர் கிளை கழக செயலாளர்கள். ஆர்பி. கோபி. வீ.விநாயகம். எஸ்.கனேசன். பிச்சை பான்டி. கள்வேலிபட்டி. பாரி.கருப்பையா. மேல சின்னம்பட்டி. சம்பத். உமாபதி. அம்மாபேரவை மணோகரன். வலசை. சுப்பிரமணியன். புதுப்பட்டி கிளை செயலாளர். பாண்டுரெங்கன். முத்துக்குமார் மாவட்ட பிரதிநிதி. உமேஸ்.மாணிக்கம்.மகாராஜன் இளைஞர் இளம் பெண்கள் பாசறை. முடுவார்பட்டி ராஜ்குமார். ராஜ்..பெரிய ஊர்சேரி. முத்துராமன் கார்த்திக். செந்தில். மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொன்டனர்





இந்திய திருநாட்டின் 78 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு திருப்பூரில் அனைத்திந்திய விவசாய மற்றும் தொழிலாளர்கள் சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் சங்க நிறுவன தலைவர் விவசாய மணி என்கின்ற ஜி. சுப்பிரமணி தலைமையில் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் மூவர்ணக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினர் பின்னர் பொது மக்களுக்கும், தொழிலாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் இனிப்பு மற்றும் உணவு வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது

# வரும் சட்டமன்றத் தேர்தலில் விருதுநகர் மாவட்டத்தில் ஏழு தொகுதிகளையும் அதிமுகவே கைப்பற்றும்: முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி பேச்சு

ராஜபாளையம், ஆக 16

வரும் சட்டமன்றத் தேர்தலில் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஏழு சட்டமன்ற தொகுதிகளையும் அதிமுகவை கைப்பற்றும் என ராஜபாளையத்தில் நடைபெற்ற அதிமுக செயல் வீரர்கள் கூட்டத்தில் அ.தி.மு.க மாவட்ட செயலாளரும்,முன்னாள் அமைச்சருமான கே.டி. ராஜேந்திர பாலாஜி பேசினார்.

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் அதிமுக செயல்வீரர்கள் கூட்டமும் அதிமுக உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.அ.தி.மு.க மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கே டி ராஜேந்திர பாலாஜி க சிறப்புரையாற்றினார். அவர் பேசியதாவது:

தேர்தல் நேரத்தில் நமது கழகத் தொண்டர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றி வந்தனர். இரவு பகல் பாராது கடந்த பாராளுமன்ற தேர்தலில் டாக்டர் கிருஷ்ணசாமிக்கு தீவிரமாக ஆதரவு தேடி தந்ததற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எங்கு பார்த்தாலும் அதிமுக ஆட்சிக்கே ஓட்டு என்ற நிலை இருந்து வருகிறது.

அரசியலில் மாற்றம் வந்துவிட்டது. மத்தியில் மோடி வேண்டுமா? வேண்டாமா? மத சமூக ரீதியான பிளவு ஏற்பட்டதால் கடந்த பாராளுமன்ற தேர்தலில் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டது. ஏழு தொகுதிகளிலும் விருதுநகர் மாவட்டத்தில்






இனி அதிமுக தான் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெறும். 40 தொகுதிகளிலும் வெற்றி பெற்று என்ன செய்து விட்டீர்கள்? விமானத்தில் சென்று அங்கு எந்த ஒரு கேள்வியும் கேட்க முடியாமல் தமிழகத்திற்கு வேண்டிய நிதியை கூற பெற முடியாமல் கேண்டினில் டீ வடை சாப்பிட்டு கொண்டிருக்கிறீர்கள். திமுகவை நம்ப யாரும் தயாராக இல்லை. தற்போது எங்களிடம் அதிமுக தொண்டர்கள், இரட்டை இலை சின்னம் உள்ளது. இதுவே எங்களுக்கு பெரிய பலம். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் உறுதிமொழி கூறினோம். மாதம்தோறும் ரூ.2500 அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்குவோம். கொடுத்து கொடுத்து சிவந்த கரம் எம் ஜி ஆர் கரம். விதை விதைத்து அறுவடை செய்தது அதிமுக. ஜெயலலிதாவால் வளர்ந்த கட்சி, பொதுச் செயலாளர் எடப்பாடி யாரால் நடத்திக் கொண்டிருக்கும் கட்சி, அதிமுக நடுநிலையுடன் ஆட்சி நடத்தும் அதிமுக கட்சி. தமிழ்நாடு முழுக்க முழுக்க அதிமுக வென்றது என்ற செய்தி வர வேண்டும். ராஜபாளையத்தில் நூற்பாலைகள் நலிவடைந்துவிட்டன. விருதுநகரில் தொழிற்சாலைகள் மூடப்பட்டு கொண்டிருக்கின்றன. சிவகாசியில் பட்டாசு தீப்பெட்டி தொழிற்சாலைகள் முடங்கி வருகின்றன. விவசாயம் கருகி நாசமாகி வருகிறது. கமிஷனுக்கு திமுகவினர் தேடி அலைகின்றனர். மக்களைப் பற்றி சிந்திக்க திமுகவினருக்கு நேரமே இல்லை. ஏழை மக்களுக்காக பாடுபட்டுக் கொண்டிருக்கும் கட்சி அதிமுக மட்டுமே. திமுக கட்சியின் அதிகாரம் ஆட்சி எத்தனை காலத்திற்கு வரும்? தற்போது பொதுமக்கள் பேச ஆரம்பித்து விட்டார்கள். குளங்கள், ஆறுகள், யூனியன் ஆபீஸ் உங்கள் அப்பன் வீட்டு சொத்து கிடையாது. எங்களிடம் பூச்சாண்டி காட்ட வேண்டாம். அடுத்து நாங்கள் கட்சிக்கு வந்தால் பத்து ஆண்டுகள் ஆட்சியில் இருப்பது உறுதி. திமுக அடிமட்ட தொண்டன் கட்சி மட்டுமே தங்களிடம் இருப்பதாகவும் எந்த ஒரு சலுகையும் தங்களுக்கு இல்லை எனவும் புழுங்கிக் கொண்டிருக்கிறான். கலெக்சன், கமிஷன், கரப்ஷன் இதுதான் திமுக ஆட்சி. அதிமுக ஆட்சியில் திட்டப்பட்ட பல திட்டங்களை திமுக ஆட்சியில் கிடப்பில் போட்டுக் கொண்டிருக்கிறார்கள் அதிமுக கொடுக்கும் கட்சி. திமுக கெடுக்கும் கட்சி. திமுக ஆட்சிக்கு முறைப்படி மக்கள் முடிவு கட்டுவார்கள்" இவ்வாறு முன்னாள் அமைச்சர் கே.டி. ராஜேந்திர பாலாஜி தொண்டர்களிடம் பேசினார்.

கூட்டத்தில் அகில உலக எம்.ஜி.ஆர் மன்ற செயலாளர் எஸ்.என். பாபுராஜ், மாவட்ட பேரவை செயலாளர் கிருஷ்ணராஜ், ஒன்றிய செயலாளர்கள் நவரத்தினம், ஆர்.எம்.குருசாமி, தெற்கு நகர செயலாளர் பரமசிவம், வடக்கு நகர செயலாளர் வக்கீல் துரைமுருகேசன், சேத்தூர் செயலாளர் பொன்ராஜ், செட்டியார்பட்டி செயலாளர் அங்கு துரை, மேற்கு ஒன்றிய செயலாளர் அழகாபுரியான், மாவட்ட மகளிர் அணி செயலாளர் அழகுராணி, மகளிரணி நகர செயலாளர் ராணி, முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் கவிதா, ஒன்றிய மகளிரணி கந்தலீலா, துரைச்சி, போக்குவரத்து கழக கௌரவ தலைவர் குருசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர். அனைவருக்கும் அதிமுக உறுப்பினர் அட்டைகளை முன்னாள் அமைச்சர் கே டி ராஜேந்திர பாலாஜி வழங்கினார்.

# சாலையின் குறுக்கே கம்பீரமாக நின்ற ஒற்றை காட்டு யானை

தேன்கனிக்கோட்டை, ஆக. 16


கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை அருகே உள்ள அய்யூர் வனப்பகுதியில் காட்டு யானைகள், காட்டு எருமைகள், மான்கள் உள்ளிட்ட வனவிலங்குகள் அதிக அளவில் வாழ்கின்றன. இதில் குறிப்பாக இந்த வனப்பகுதியில் காட்டு யானைகள் அதிக அளவில் உள்ளன. காட்டு யானைகள் உணவு மற்றும் தண்ணீரை தேடி அவ்வப்போது வனப்பகுதி உள்ளே பெட்டமுகிலாளம் மற்றும் கொடகரை ஆகிய மலை கிராமங்களுக்கு செல்லும் சாலையில் நிற்பது வழக்கமாக உள்ளது.



இந்த நிலையில் இன்று அய்யூர் வன அலுவலகத்தில் இருந்து பெட்டமுகிலாளம் செல்லும் சாலையில் ஒற்றை காட்டு யானை ஒன்று சாலையின் நடுவே கம்பீரமாக நின்றது. அந்த வழியாக இருசக்கர வாகனங்களில் சென்ற வாகன ஓட்டிகள் காட்டு யானையை பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். இதனையடுத்து அவர்கள் காட்டு யானையிடமிருந்து தப்பிக்க அங்கிருந்து வந்த வழியில் திரும்பி சென்றனர். சாலையை மறித்து நின்ற காட்டு யானையால் மலை கிராமங்களுக்கு சென்ற பொது மக்கள் செல்ல முடியாமல் கடும் அவதி அடைந்தனர்.

பின்னர் நீண்ட நேரத்திற்கு பின் அந்த ஒற்றை காட்டு யானை சாலையில் இருந்து வனப்பகுதிக்குள் சென்றது. இதனால் நிம்மதி பெருமூச்சு விட்ட கிராம மக்கள் தங்களது ஊர்களுக்கு அந்த சாலை வழியாக சென்றனர். தினந்தோறும் இது போன்ற சம்பவங்கள் நடப்பதும், காட்டு யானைகள் உள்ளிட்ட வனவிலங்குகளை கிராம மக்கள் சந்திப்பதும் வாடிக்கையாக உள்ளது.

# ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே பட்டாசு ஆலையில் வெடி விபத்து 2 தொழிலாளர்கள் பலி



ஸ்ரீவில்லிபுத்தூர், ஆக. 16

விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே மாயத்தேவன்பட்டி பகுதியில் ஜெயராஜ் என்பவருக்கு சொந்தமான நாக்பூர் லைசென்ஸ் உரிமத்துடன் ஜெயந்தி பட்டாசு ஆலை செயல்பட்டு வருகிறது. இதன் உரிமையாளர் ஜெயராஜ் என்பவரிடம் ஒப்பந்தத்திற்கு கண்ணன் என்பவர் பட்டாசு ஆலையை எடுத்து நடத்தி வருகிறார்.

இந்த பட்டாசு ஆலையில் சுமார் 50க்கும் மேற்பட்ட தனித்தனி அறைகள் உள்ளன. அங்கு பட்டாசு தயாரிக்க தேவையான மருந்து பொருட்கள் குவித்து வைக்கப்பட்டு இருந்தன. தற்போது தீபாவளி பண்டிகை நெருங்கி வருவதையொட்டி பட்டாசு தயாரிப்பு பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

இந்த பட்டாசு ஆலையில் மல்லி, மானகசேரி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த சுமார் 60க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இன்று காலை அவர்கள் வழக்கம் போல் வேலைக்கு வந்து பட்டாசு தயாரிப்பை தொடங்கினர். முதலில் வெடிமருந்துகலவைபணிகள் நடைபெற்றன.

இந்த நிலையில் இருந்து பட்டாசு தயாரிக்க தேவையான மருந்து மற்றும் மூலப்பொருட்கள் ஒரு வாகனத்தில் வந்தது. அதனை தொழிலாளர்கள் இறக்கும்போது திடீரென எதிர்பாராத விதமாக உராய்வால்பயங்கரவெடிவிபத்து ஏற்பட்டது. அடுத்த விநாடி அருகில் இருந்த கட்டிடங்களிலும் தீ பரவி 5க்கும் மேற்பட்ட அறைகள் தரைமட்டமானது. இந்த விபத்தில் புலிக்குட்டி மற்றும் கார்த்தி ஆகிய இருவரும் உடல் சிதறி தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். இதுபற்றிய தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த சிவகாசி மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் தீயணைப்புத் துறை வீரர்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும் யாராவது இந்த விபத்தில் சிக்கி உள்ளார்களா? என்றும் ஆய்வு செய்து வருகிறார்கள். மல்லி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

பட்டாசு தயாரிப்பு மற்றும் விபத்து தடுப்பு தொடர்பாக மாவட்ட நிர்வாகம் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து குழுக்கள் அமைத்து ஆய்வு செய்தாலும் இன்னும் பட்டாசு ஆலைகளில் விதிமுறைகள் மீறுவது என்பது தொடர்கதையாகி வருகிறது. உரிமையாளர் மட்டுமே ஆலையை நடத்த வேண்டும் என விதிமுறைகளை விதித்தாலும் உரிமையாளர் மற்ற நபரிடம் ஒப்பந்தத்திற்கு விடுவதும் அரங்கேறி வருகிறது.

இதுபோன்று விதிகளை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

கேரளாவை சேர்ந்த நடிகரும், மத்திய பெட்ரோலியம் மற்றும் சுற்றுலாத்துறை இணை மந்திரியுமான சுரேஷ்கோபி நேற்று சிவகாசியில் உள்ள தனியார் பட்டாசு ஆலைகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது பட்டாசு ஆலை விபத்துகளை தடுக்க உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருந்தார். அவர் ஆய்வு செய்த மறுநாளே மீண்டும் ஒரு பட்டாசு ஆலை விபத்து ஏற்பட்டு 2 தொழிலாளர்கள் பலியானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## தோல்வி படம் மட்டுமே... இருந்தும் ஷாருக், சல்மானை விட அதிக கார் வைத்திருக்கும் நட்சத்திரம்



இந்திய சினிமாவில் முன்னணி நடிகர்கள் பெரும் பணக்காரர்களாக உள்ளனர். அதில், பல நட்சத்திரங்கள் பெரிய பங்களாக்கள் மற்றும் ஸ்வாங்கி கார்களை வைத்திருக்கிறார்கள். ஆனால், இதில் ஆச்சரியம் என்னவென்றால், இந்திய சினிமாவில் அதிக சொகுசு கார்களை வைத்திருக்கும் நடிகர், ஒரு படத்தில் மட்டுமே நடித்துள்ளார் என்பதும் அந்த படமும் தோல்வி அடைந்தது என்பதும் உங்களுக்கு தெரியுமா?

ஆம், அந்த நடிகர் வேறுயாரும் இல்லை, லெஜண்ட் சரவணன்தான். இவர், ஷாருக்கான், சல்மான் கான், ரன்பீர் கபூர், அல்லு அர்ஜுன் போன்ற சூப்பர் ஸ்டார்களை விட அதிக சொகுசு கார்களை வைத்திருக்கிறார்.

இந்தியாவில் எந்த நடிகரிடமும் இல்லாத அளவுக்கு, ஒன்றல்ல மூன்று ரோல்ஸ் ராய்ஸ் செடான் கார்கள், லம்போர்கினி ஹுராகன், பெராரி 488, பென்ட்லி கான்டினென்டல் ஜிடி, ஆஸ்டன் மார்ட்டின் டிபி11, லம்போர்கினி யூரஸ், பென்ட்லி ப்ளையிங் ஸ்பர் மற்றும் போர்ஷே 911 டர்போ எஸ் போன்றவற்றை வைத்திருக்கிறார்.

லெஜண்ட் சரவணன் என்று அழைக்கப்படும் சரவணன் அருள் ஒரு தொழிலதிபர் ஆவார். இவர் நடித்த ஒரே படம் 'தி லெஜண்ட்'. ஊர்வசி ரவுட்டேலா, விவேக், யோகி பாபு, சுமன், நாசர், விஜய்குமார் உள்ளிட்ட பலர் இப்படத்தில் நடித்தனர். இருப்பினும், இப்படம் வசூலில் தோல்வியடைந்தது. இன்றுவரை சரவணனின் ஒரே திரைப்படம் இதுவாகும்.

## 'இன்னும் நேரம் தேவைப்படுகிறது.. புதிய போஸ்டர் வெளியிட்ட 'தி கோட்' படக்குழு



நடிகர் விஜய், வெங்கட் பிரபு இயக்கும் 'தி கிரேட்டஸ்ட் ஆப் ஆல் டைம்' (கோட்) படத்தில் நடித்துள்ளார். இந்தப் படத்தில் பிரசாந்த், மோகன், பிரபுதேவா, ஜெயராம், கணேஷ், யோகிபாபு, அஜ்மல் அமீர், சினேகா, லைலா, மீனாட்சி சவுத்ரி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஏஜிஎஸ் என்டர்டெயின்மெண்ட் நிறுவனம் தயாரிக்கும் இந்த படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ளார்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து, தற்போது முழுவீச்சில் கிராபிக்ஸ் பணிகள் உள்பட தொழில்நுட்ப பணிகள் நடைபெற்று வருகிறது. சமீபத்தில், இப்படத்தின் பாடல்கள் வெளியாகி கவனம் பெற்றன. அதனைத்தொடர்ந்து, படத்தின் டிரெய்லருக்காக ரசிகர்கள் காத்திருக்கின்றனர்.அதன்படி,டிரெய்லர்வெளியாகும்தேதிஇன்றுஅறிவிக்கப்படும்என்றுதெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், படக்குழு புதிய போஸ்டர் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், தி கோட் படத்தில் நடிக்கும் முக்கிய கதாபாத்திரங்களின் புகைப்படங்கள் உள்ளன. அதனுடன், இன்று 'தி கோட்' படத்தின் டிரெய்லர் வெளியாகும் தேதி வெளியாகும் என்று அறிவித்திரிந்தோம். ஆனால், சிறந்த வெர்ஷனை உருவாக்க இன்னும் நேரம் தேவைப்படுகிறது. இப்போதைக்கு இந்த சின்ன டிரீட், விரைவில் தளபதியை திரையில் காண்போம், என்று பதிவிடப்பட்டுள்ளது.

## விஜய், அஜித்தைவிட பெரிய நட்சத்திரம்...படம் ஓடாததால் நடிப்பை விட்ட நடிகர்

தமிழ் நடிகர்களைப் பற்றி பேசும்போது, நம் மனதில் உடனடியாகத் தோன்றும் முதல் இரண்டு பெயர்கள் ரஜினிகாந்த் மற்றும் கமல்ஹாசன். இருப்பினும் 90 களில், தமிழ் சினிமாவில் இருந்து மற்றொரு நடிகர் ஒருவர் நட்சத்திர அந்தஸ்தை பெற்றார். அவர் விஜய், அஜித்தைவிட பெரிய நட்சத்திரமாக இருந்தார். இருப்பினும், திரைப்படங்களை விட்டு விலகினார். பின்னர் மீண்டும் திரைப்படங்களுக்குத் திரும்பினார். நாம் பேசுவது வேறுயாரும் இல்லை, அரவிந்த் சாமிதான். இயக்குனர் மணிரத்னம் இயக்கத்தில் கடந்த 1991ம் ஆண்டு வெளியான 'தளபதி' படத்தின் மூலம் அறிமுகமானார் அரவிந்த் சாமி. அதனைத்தொடர்ந்து மணிரத்னம் இயக்கத்தில் 'ரோஜா' (1992) மற்றும் 'பாம்பே' (1995) படங்களில் நடித்தார். இவ்விரு படங்களும் தேசிய அளவில் வரவேற்பை பெற்றன. 1997ம் ஆண்டு தேசிய விருது பெற்ற 'மின்சார கனவு' திரைப்படத்தில் நடித்ததன் மூலம் திரைத்துறையில் மேலும் உயர்ந்தார். அதே ஆண்டில், 'சாத் ரங் கே சப்னே'யில் ஜுஹி சாவ்லாவுக்கு ஜோடியாக பாலிவுட்டில் அறிமுகமானார். பின்னர் இவர் நடித்த படங்கள்' பாக்ஸ் ஆபிஸில் சரியாக செயல்பட தவறியது. இதனால், 2006ம் ஆண்டு வெளியான 'சாசனம்' படத்திற்கு பிறகு நடிப்பதை நிறுத்தினார். பின்னர் ஓய்வுக்கு பிறகு, 2013ல் மணிரத்னம் இயக்கத்தில் வெளியான 'கடல்' திரைப்படத்தின் மூலம் மீண்டும் நடிக்க தொடங்கினார். அதனைத்தொடர்ந்து, 'தனி ஒருவன்', 'போகன்' போன்ற படங்களில் வில்லனாக நடித்து ரசிகர்களை கவர்ந்தார். 2021 ம் ஆண்டில், 'தலைவி' படத்தில் எம்.ஜி.ராமச்சந்திரனாக நடித்து, பாலிவுட்டிற்கும் மீண்டும் திரும்பினார்.

## 'தங்கலான்' படத்தை வெளியிட நீதிமன்றம் அனுமதி



இயக்குனர் பா.ரஞ்சித் இயக்கத்தில் விக்ரம் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'தங்கலான்'. இந்த படம் நாளை திரையரங்குகளில் வெளியாக உள்ளது. தற்போது இப்படத்தின், புரொமோஷன் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்படத்தை, ஸ்டுடியோ கிரீன் தயாரித்திருக்கிறது.

சமீபத்தில், சுந்தர் தாஸ் என்பவருக்கு ஸ்டுடியோ கிரீன் ரூ.10.35 கோடி கடனை செலுத்தாத விவகாரத்தில், படம் வெளியாகும் முன் ரூ.1 கோடிபணத்தைடெபாசிட்செய்யவேண்டும்எனதயாரிப்பாளர் ஞானவேல் ராஜாவுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில்,உத்தரவின்படிரூ.1கோடிபணத்தைசொத்தாட்சியர் கணக்கில் செலுத்தியதாக ஸ்டுடியோ கிரீன் தரப்பில் தெரிவித்ததையடுத்து, 'தங்கலான்' படத்தை வெளியிட சென்னை உயர்நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. மேலும், வழக்கு விசாரணையை வரும் 28ம் தேதிக்கு ஒத்திவைத்தது. இதனையடுத்து ரசிகர்கள் உற்சாகத்தில் உள்ளனர்.

## ராம் சரண், அல்லு அர்ஜுனுடனான போட்டி பற்றி பேசிய பிரபாஸ்




தென்னிந்திய சினிமா, நடிகர்களிடையே உள்ள ஒற்றுமைக்காக பாராட்டப்படுகிறது. இருந்த போதிலும், சில நடிகர்களுக்கிடையே வசூல் ரீதியாக போட்டி இருந்துகொடுதான் இருக்கிறது.

அவ்வாறு, பிரபல நடிகர் பிரபாஸ் தனக்கும் சக நடிகர்களுக்கும் இடையே போட்டி இருப்பதை ஒருமுறை ஒப்புக்கொண்டார். மேலும், அதை எவ்வாறு கையாண்டார் என்பதையும் விளக்கினார்.

முன்னதாக நடந்த நேர்காணல் ஒன்றில், ராம் சரண் மற்றும் அல்லு அர்ஜுனுடனான போட்டி பற்றி பிரபாஷிடம் கேட்கப்பட்டது. அப்போது அவர் கூறுகையில்,

'எல்லா துறைகளிலும் உள்ளதுபோலவே சினிமாவிலும் போட்டி இருக்கிறது. இருப்பினும், இப்போது இதுபோன்ற ஒரு விஷயத்தின் வெளிப்பாடு முன்பை விட அதிகமாக உள்ளது. எனினும், எந்த போட்டியுமின்றி திரைப்படங்களில் நடிக்க கவனம் செலுத்தி வருகிறேன், என்றார்.

## 'இந்தியாதான் இந்திரா...' கங்கனா ரனாவத்தின் 'எமர்ஜென்சி' பட டிரெய்லர் வைரல்



முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி, நாடு முழுவதும் அமல்படுத்திய அவசரநிலை பிரகடனத்தை மையமாக வைத்து உருவாகி இருக்கும் படம் 'எமர்ஜென்சி'. இதில், இந்திரா காந்தியாக கங்கனா ரனாவத் நடித்துள்ளார். படத்தை அவரே இயக்கியும் உள்ளார். ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ள இப்படத்தின் திரைக்கதை மற்றும் வசனத்தை ரித்தேஷ் ஷா எழுதியுள்ளார். கடந்த ஆண்டு ஜனவரி மாதமே இதன் படப்பிடிப்பு நிறைவடைந்தநிலையில், நவ. 24ம் தேதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், சில காரணங்களால் படத்தின் ரிலீஸ் தேதி தள்ளிவைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, கடந்த ஜூன் மாதம் 14ம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டு மீண்டும் தள்ளிப்போனது. சமீபத்தில், இப்படம் அடுத்த மாதம் 6ம் தேதி வெளியாகும் என்று படக்குழு அறிவித்தது. இந்நிலையில், 'எமர்ஜென்சி' படத்தின் டிரெய்லர் வெளியாகியுள்ளது. இதனை கங்கனா ரனாவத் தனது இன்ஸ்டாகிராம பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அதனுடன், 'இந்தியாதான் இந்திரா & இந்திராதான் இந்தியா!!! நம் நாட்டு வரலாற்றில் மிகவும் சக்திவாய்ந்த பெண்', என்று பதிவிட்டுள்ளார். தற்போது இந்த டிரெய்லர் வைரலாகி வருகிறது.

## ஜப்பான் ஓபன் பேட்மிண்டன்; சிந்து, லக்ஷயா சென் விலகல்



பல முன்னணி வீரர் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொள்ள உள்ள ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் போட்டி யோகோஹகா நகரில் வரும் 20ம் தேதி தொடங்குகிறது. இந்நிலையில், இந்த தொடரில் இருந்து இந்தியாவின் முன்னணி வீரர்களாக லக்ஷயா சென், எச்.எஸ். பிரனாய் மற்றும் வீராங்கனை பி.வி.சிந்து ஆகியோர் விலகி உள்ளதாக கூறப்படுகிறது. மேலும், இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் ரங்கி ரெட்டிசிராக் ஷெட்டி இணையும் இந்த தொ இருந்து விலகி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. பாரீஸ் ஒலிம்பிக் தொடர் நிறைவடைந்த பின் நடைபெறும் முதல் பேட்மிண்டன் தொடர் இதுவாகும். இந்த தொடரில் இருந்து இந்திய முன்னணி வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் விலகியதால் ரசிகர்கள் கவலை அடைந்துள்ளனர்.

## மகளிர் டி20 கிரிக்கெட்; கேபி லூயிஸ் அபார சதம்... இலங்கையை வீழ்த்திய அயர்லாந்து




இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி அயர்லாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டி20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதில் முதலில் டி20 போட்டிகள் நடைபெற்று வருகிறது. இதில் முதல் போட்டியில் இலங்கை வெற்றி பெற்று தொடரில் 10 என முன்னிலையில் இருந்தது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 2வது டி20 போட்டி டப்ளினில் நேற்று நடைபெற்றது. இந்தஆட்டத்தில்முதலில்பேட்டிங்ஆடியஅயர்லாந்து 20 ஓவர்களில் 3 விக்கெட்டை இழந்து 173 ரன்கள் குவித்தது. அயர்லாந்து தரப்பில் அபாரமாக பேட்டிங் ஆடியகேபிலூயிஸ்சதம்(119ரன்)அடித்துஅசத்தினார்.

இதையடுத்து 174 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய இலங்கை 20 ஓவர்களில் 7விக்கெட்டை இழந்து 166ரன்கள்மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 7 ரன் வித்தியாசத்தில் அயர்லாந்தி திரில் வெற்றி பெற்றது.

இலங்கை தரப்பில் அதிகபட்சமாக ஹர்ஷித சமரவிக்ரம 65 ரன்கள் எடுத்தார். அயர்லாந்து தரப்பில் ப்ரீயா சார்ஜென்ட், ஓர்லா ப்ரெண்டர்காஸ்ட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் 11 என தொடர் சமநிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான 3வது டி20 போட்டி வரும் 16ம் தேதி நடைபெறுகிறது.

## இந்திய கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக மோர்னே மோர்கல் நியமனம்




இந்திய ஆண்கள் கிரிக்கெட் அணி வங்காளதேசத்திற்கு எதிராக 2 டெஸ்ட் மற்றும் 3 டி20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆட உள்ளது. இந்திய மண்ணில் நடைபெறும் இந்த தொடர் செப்டம்பர் 19ந்தேதி தொடங்குகிறது. தற்போது இந்திய கிரிக்கெட் அணியின் தலைமை பயிற்சியாளராக கவுதம் கம்பீர் நியமிக்கப்பட்டுள்ளார். பீல்டிங் பயிற்சியாளராக டி திலீப்பும், உதவி பயிற்சியாளர்களாக அபிஷேக் நாயர்மற்றும்ரியான்டென்டோஸ்கேட்டும்செயல்பட்டுவருகின்றனர்.

இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக தென் ஆப்பிரிக்க முன்னாள் வீரர் மோர்னே மோர்கல் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிப்பு வெளியாகி உள்ளது. இதுகுறித்த தகவலை பி.சி.சி.ஐ. செயலாளர் ஜெய்ஷா உறுதிப்படுத்தியுள்ளார்.

செப்டம்பர் 1ந்தேதி முதல் மோர்னே மோர்கல் தனது பயிற்சி அளிக்கும் பணியை தொடங்க உள்ளார். ஐ.பி.எல் தொடரில் லக்னோ அணியின் ஆலோசகராக கம்பீர் செயல்பட்டபோது மோர்னே மோர்கல் அந்த அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக செயல்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாரீஸ் ஒலிம்பிக்: வினேஷ் போகத்திற்கு வெள்ளிப்பதக்கம் வழங்கக்கோரிய மனு தள்ளுபடி



பாரீஸ் ஒலிம்பிக் மகளிர் மல்யுத்தம் 50 கிலோ எடைப்பிரிவில் இறுதிப்போட்டிக்கு முன்னேறிய இந்திய வீராங்கனை வினேஷ் போகத், கூடுதல் எடை காரணமாக தகுதி நீக்கம் செய்யப்பட்டார். 100 கிராம் உடல் எடை கூடியதாக கூறி எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையால் கடும் அதிர்ச்சி அடைந்த வினேஷ் போகத், மல்யுத்த போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

இதனிடையே இறுதிப்போட்டிக்கு முன்பாக தகுதிநீக்கம் செய்யப்பட்ட வினேஷ் போகத் அதை எதிர்த்து சர்வதேச விளையாட்டு நடுவர் மன்றத்தில்முறையிட்டார்.இறுதிப்போட்டிக்கு முன்பு வரை தனது எடை சரியாக இருந்ததால் வெள்ளிப்பதக்கம் வழங்க வேண்டும் என்றும் அதில் கூறியிருந்தார்.

இதையடுத்து, வினேஷ் போகத் விவகாரத்தில் அனைத்து தரப்பிடமும் விசாரணை நடத்தப்படும் என சர்வதேச விளையாட்டு நடுவர் மன்றம் அறிவித்தது. தொடர்ந்து வினேஷ் போகத் விவகாரத்தை நீதிபதி அனபெல் பெனட் விசாரித்தார். வினேஷ் போகத் தரப்பில் இந்தியாவின் மூத்த வழக்கறிஞர் ஹரீஷ் சால்வே ஆஜராகி வாதங்களை முன்வைத்தார்.

வாதங்கள் முடிவடைந்த நிலையில் வழக்கின் தீர்ப்பு 3 முறை ஒத்திவைக்கப்பட்டது. இந்த நிலையில், பாரீஸ் ஒலிம்பிக்கில்மல்யுத்தவீரர்வினேஷ்போகத்திற்குவெள்ளிப்பதக்கம்வழங்கக்கோரியமனுவைவிளையாட்டுக்கான நடுவர் நீதிமன்றம் (சி.ஏ.எஸ்.) தள்ளுபடி செய்துள்ளது.

முன்னதாக ஆகஸ்ட் 16ந்தேதி தீர்ப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், இன்று வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், வினேஷ் போகத் விவகாரத்தில் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து விரைவில் முடிவு செய்யப்படும் எனவும், இந்த விவகாரம் தெளிவற்ற விதிகள் பற்றிய தீவிர கேள்விகளை எழுப்பியுள்ளது எனவும் இந்திய ஒலிம்பிக் சங்கம் தெரிவித்துள்ளது.

## ஒருநாள் கிரிக்கெட் தரவரிசை; பேட்ஸ்மேன்கள் பட்டியலில் 2ம் இடத்திற்கு முன்னேறிய ரோகித் சர்மா




சர்வதேசகிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) ஆண்களுக்கான ஒருநாள் கிரிக்கெட் தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில் பேட்ஸ்மேன்கள் பட்டியலில் முதல் இடத்தில் பாகிஸ்தானின் பாபர் அசாம் (824 புள்ளி) முதல் இடத்தில் தொடர்கிறார். இந்தியாவின் ரோகித் சர்மா ஒரு இடம் முன்னேறி (765 புள்ளி) 2வது இடத்திற்கு முன்னேறி உள்ளார்.

சுப்மன் கில் ஒரு இடம் சரிந்து (763 புள்ளி) 3வது இடத்திற்கு வந்துள்ளார். 4வது இடத்தில் விராட் கோலி (746 புள்ளி), அயர்லாந்தின் ஹாரி டெக்டர் (746 புள்ளி) ஆகியோர் உள்ளனர். பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் முதல் 4 இடங்களில் முறையே கேசவ் மஹராஜ் (716 புள்ளி), ஜோஷ் ஹேசில்வுட் (688 புள்ளி), ஆடம் ஜாம்பா (686 புள்ளி), குல்தீப் யாதவ் (665 புள்ளி) ஆகியோர் உள்ளனர்.

ஒருநாள் ஆல்ரவுண்டர்கள் தரவரிசையில் முதல் 3 இடங்களில் முறையே முகமது நபி (320 புள்ளி), ஷகிப் அல் ஹசன் (292 புள்ளி), சிக்கந்தர் ராசா (288 புள்ளி) ஆகியோர் உள்ளனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.